திருச்சி-22, அரசு கலைக் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: முனைவர். P.சத்யா, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.

ந.க. எண். 369/அ/2025, நாள்: 30.06.2025

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி திருமதி அ.ஜெஸிந்தாமேரி இளநிலை உதவியாளர் அரசு கலைக் கல்லூரி. திருச்சி-22 – தமிழ்நாடு அரசு பணியாளர் - தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு - இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர் - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித ந.க. எண். 453/PSD-B1/2022 நாள் : 26.07.2023
2. சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்.35681/பி1/2023 நாள்: 23.11.2023
3. சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் பணியிட மாறுதல் செயல்முறைகள் ந.க. எண்.9492/பி1/2024 நாள்: 14.03.2024
4. திருச்சி-22, அரசுக் கலைக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள் - ந.க. எண். 369/அ/2024 நாள்:21.03.2024

-------------

பார்வை 1-ல் கண்டுள்ள செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின் பார்வை (2)-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி பணிநியமனம் செய்யப்பட்ட வரிசை எண்: 32 –ல் இடம்பெற்றுள்ள திருமதி. அ.ஜெஸிந்தாமேரி என்பார், புதுக்கோட்டை, அரசு கல்வியியல் கல்லூரியில் இளநிலை உதவியாளராக 24.11.2023 மு.ப பணியில் சேர்ந்தார்.

பின்னர் பார்வை(3)-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் இடமாறுதல் செயல்முறைகளின் படி திருச்சி-22, அரசுக் கலைக் கல்லூரிக்கு இளநிலை உதவியாளராக இடப்பெயர்வு செய்யப்பட்டு 18.03.2024 முதல் இக்கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார்.

தற்போது இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. அ.ஜெஸிந்தாமேரி என்பாரின் பணி, அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 24.11.2023 முதல், பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

நிபந்தனை: "இப்பணிவரன்முறை-தொகுதி IV (2022-2023) பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம், மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்கு உட்பட்டது.

முதல்வர்

முதல்வர்
அரசு கலைக்கல்லூரி
திருச்சி - 620 022.

பெறுநர்
1. திருமதி. அ.ஜெஸிந்தாமேரி, இளநிலை உதவியாளர், அரசு கலைக்கல்லூரி, திருச்சி-22

நகல்